***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.

**OS.No. 4/2018**

**P.W.3 திரு.ஆரோக்கியசேவியர் த/பெ.செபஸ்தியான் நாள் – 13.03.2026**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் . பொதுவாக அடங்கல்களை கிராம நிர்வாக அலுவலர் தான் தயார் செய்வார் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் தயார் செய்த ஆவணங்களை சரியாக உள்ளதா என்பதை பார்த்தற்கான குறிப்புகள் அந்த ஆவணங்களில் உள்ளதா என்றால் இல்லை . மகசூல் என்பது விளைச்சலை மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான் . அதில் என்ன வருமானம் வந்தது என்று அந்த ஆவணத்தில் இருக்காது என்றால் சரிதான் . பொதுவாக விளைச்சலை விட செலவுகள் அதிகமாக இருக்க வாயப்புள்ளது என்றால் அதை நான் சொல்ல இயலாது. நான் தாக்கல் செய்துள்ள அடங்கல்கள் அனைத்தையும் கிராம நிர்வாக அலுவலர் நேரடியாக பார்க்காமல் தயார் செய்தது என்றும் , அதனால் தான் எந்தவித குறிப்புகளும் இல்லை என்றால் சரியல்ல , கிராம நிர்வாக அலுவலர் ஆய்வு செய்து தான் அடங்கல் தயார் செய்வார் . அந்த ஆவணங்களில் எதன் அடிப்படையில் விளைச்சலை கணக்கிட்டுள்ளார் என்ற விவரம் இல்லை என்றால் விவரங்கள் உள்ளது , நேரடியாக விளைச்சலை பார்த்துவிட்டு தான் கணக்கீடு செய்யப்படும் . எந்த சூத்திரத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று ஆவணத்தில் இல்லை என்றால் சூத்திரம் அதில் போடப்படமாட்டாது. அதிலுள்ள செலவுகளை யார் செய்தார், வருமானங்களை யார் அடைந்து கொண்டார்கள் என்றால் அதில் சம்மந்தப்பட்டுள்ள விவசாயி அடைந்து கொள்வார் . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரால் நேரடியாக பார்த்து தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லை

என்றும், அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த ஆவணங்கள் வழக்கு சொத்தின் முழுமையான வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

**2, 3, 9 முதல் 11 பிரதிவாதிகள் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*